[30th January 1961

SRI S. M. ANNAMALAI : ஸார், சர்க்கார் வழக்குகள் பைசல் ஆகாமல், ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டு வருகிறது என்று அறிக்கையைப் பார்த்தால தெரிகிறது. ஆகவே, இதை சர்க்கார் பரிசிலனை செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மையல்ல ; சரியல்ல.

SRI V. K. KOTHANDARAMAN : துரிதமாகப் பைசல் செய்வதற்கு வேண்டி, நீதி மன்றங்களை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எப்போது அவசியம் ஏற்படுகின்றதோ, அப்போதெல்லாம் நீதி மன்றங்கள் அதிகப் படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தத்திலே பார்க்கும் போது வழக்குகளின் முடிவு துரிதமாக நடந்துகொண்டுதான் வருகிறது.

Harijan cultivators

* 264 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state the number of pairs of bulls supplied to Harijan cultivators district-war for the last three years?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the Table of the House.

SRI T. S. RAMASWAMI : 1957-58, 1958-59-ல் கன்யாகுமரி ஜில்லாவிற்கு மட்டும் இந்த எருதுகள் கொடுப்பது குறைந்திருப் பதன் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : ஜனத்தொகையைப் பொறுத்துத் தான் இது கொடுக்கப்படுகிறது. அங்கு ஜனத்தொகை குறை வாக இருக்கிறது.

SRI J. MATHA GOWDER : ஸார், நிலகிரி ஜில்லாவிலே உள்ள ஹரிஜன மக்களுக்கு விவசாயத்திற்கு எருதுகள் வைத்து அங்கு உழவு நடத்த லாயக்கில்லையாகையால், பயிரிடுவதற்கு லாயக்கான விவசாயக் கருவிகளை அவர்களுக்கு கொடுத்துதவ அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இதுவரை அரசாங்கத்திலே இந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. இருந்தாலும், கனம் அங்கத் தினர் அவர்கள் சொல்வதால் இதையும் பரிசீலனை செய்து பார்க் கலாம்.

---

a Printed as Appendix V on page 136 infra.

30th January 1961]

SRI P. G. MANICKAM : ஸார், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஹரிஜன விவசாயிகளுக்கு பயிர் செய்வதற்கு பசு மாடுகளும், எருதுகளும் இலவசமாக வாங்கிக்கொடுத்து உதவுவது பற்றி அரசாங்கம் ஏதாவது ஏற்பாடுகள் செய்யுமா? அல்லது பரிசிலனையாவது செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : விவசாயம் செய்வதற்கு பசு மாடுகள் வாங்கிக் கொடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. எருதுகள் வாங்கிக் கொடுப்பது என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. அதன்படிதான் காளை மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. கூட்டுறவு சொசைடி, போன்றவை அமைக்கப்பட்டால், அப்போது பசு மாடுகள் வாங்கிக் கொடுக்க ஊக்கம் அளிக்கப்படும்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவர் அவர்களே, பெண்களை பிற்பட்ட சமூகத்தினராகக் கருதி ஹரிஜன மக்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, அதன்படி பசு மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனப் பெண்கள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.

SRI V. SUBBIAH : ஸார், ஹரிஜனங்களுக்கு மாடு வாங்கிக் கொடுக்க வேண்டி ஒதுக்கிய தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. இப்போது விவசாயத்திற்கு நல்லமுறையிலே உழவு மாடுகள் வேண்டுமென்றால், ஆயிரக்கணக்கான ரூபாய் போட்டு வாங்க வேண்டி இருக்கிறது. இப்படி ரொம்பவும் குறைந்த தொகையின் மூலம் நல்ல மாடுகளை வாங்க முடியாது. மேலும், அப்படி வாங்கப்படும் மாடுகள் விவசாயத்திலே அனுபவமுள்ள முக்கியஸ்தர்களைக் கொண்டு சந்தைக்குச் சென்று தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்று நினைக்கிறேன். இப்போது நடைமுறையிலே ஆபீசர்கள் மாடுகள் வாங்குவதிலே பல தவறுகள் நடப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாதபடிக்கு இதைக் கவனிக்க ஒரு போர்டு மாதிரி ஒரு குழு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : சஜெஷன் சொல்கிறார்.

SRI S. SADASIVAM : எங்கள் பகுதியிலே காளை மாடுகள் வாங்கி உபயோகிப்பதைவிட பசு மாடுகள் அதிகமாக உழவுக்கு உபயோகிக்கிறார்கள். காங்கேயம் பசு மாடு காளை மாடுகளைவிட விவசாயிக்கு நல்லமுறையிலே பயன்படுவதால், அங்குள்ள பெரிய விவசாயிகள்கூட பசு மாடுகளைத்தான் உழவுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதை உணர்ந்து ஹரிஜனங்களுக்கும் காளை மாடுகளுக்குப் பதில், பசு மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : காளை மாடுகள் வாங்கிக் கொடுப்பது என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. பசு மாடுகள் லாயக்கான நிலைமையில் இல்லை என்று கருதப்படுகிறது.

Sri T. S. RAMASWAMI : ஹரிஜனப் பெண்கள் விவசாயத்திற்கு மாடுகள் வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டால், அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. ஹரிஜனப் பெண்களுக்கும் அம் மாதிரி கொடுக்க வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : மாடு வாங்க கடனுதவி கேட்டு வரக்கூடிய விண்ணப்பங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் யாருக்கு சீட்டு விழுகிறதோ அவர்களுக் கெல்லாம் மாடு வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அந்த முறையிலே ஆண்கள் இல்லாத பெண்கள் மாடு வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால், அவர்களுக்கும் இந்த முறையில் மாடு கொடுக்கப் படும்.

9-00 a.m. **Sri A. GOVINDASAMY :** இந்த மாடுகள் தருவது மக்கள் சொந்தத்தில் நிலம் வைத்துக் கொண்டிருந்தால்தான் கொடுக்கப் படுகின்றது. சொந்தத்தில் நிலமில்லாமல் குத்தகைக்குப் பயிரிடு பவர்களுககுக் கொடுக்கப்படுவதில்லை. ஆகையால், குறிப்பிட்ட ஏக்கர் நிலத்தை குத்தகைக்குப் பயிரிட்டாலும் அவர்களுக்கும் வழங்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : சொந்தத்தில் நிலம் வைத்திருப் பவர்கள் மாத்திரமல்லாமல் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருந் தாலும் கொடுத்திருக்கிறார்கள்.

Agriculture Department

* 265 *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவை சீரமைக்க வேண்டுமென்று, திட்டக் கமிஷன் மாநில சர்க்காருக்கு ஆலோசனை கூறியுள்ளதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்த விவசாய இலாகாவை அகில இந்திய சர்வீசாக மாற்றவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஏதாகிலும் மாநில சர்க்காரை ஆலோசனை கேட்டார் களா ? அதற்கு மாநில சர்க்கார் சொல்லிய பதில் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ராஜ்ய விவசாய அமைச்சர்கள் மாநாட்டிலே இந்த யோசனை கூறப்பட்டது. ஆனால் ராஜ்ய விவசாய அமைச்சர்கள் இதை ஏற்றுக்கொள்ள வில்லை. இந்த அரசாங்கமும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS